[24th February 1961

Srimathi A. S. Ponnammal : அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலில், பிற்போக்கு பகுதிகளின் நலத்திற்காக அதிக பணம் செலவானாலும் பரவாயில்லையென்று சொன்னார்கள். மதுரை ஜில்லா நிலக்கோட்டை தாலூகாவில் சாத்தியார் திட்டம் கடந்த நான்கு வருடங்களாக மேலே போய் கீழே விழுந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது சர்க்காரிடம் இருக்கிறது. அது, "அன் எக்கனமிக்கல்" என்று சொல்லி தள்ளிவைக்கப் பட்டிருக்கிறது என்று அறிகிறேன். பிற்பட்ட பகுதிகள் சம்பந்தப்பட்டவரையில், இதுபோன்றவற்றை உடனடியாக சாங்க்ஷன் செய்யக்கூடிய நிபந்தனையை அரசாங்கம் உண்டாக்குமா ?

The Hon. Sri P. Kakkan : தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள், ஆகவே அதுபற்றி தனிக்கேள்வி கேட்டால் சொல்கிறேன்.

Sri A. Vedarathnam : மிக லாபகரமான முறையில் பாசன வசதி அளிக்கக்கூடிய காவேரி டெல்டாவில் கடலில் வீணைகப் போகிற ஜலத்தை, சில லட்சம் ரூபாய் செலவழித்தால் பல்லாயிரக் கணக்கான ஏக்கர்களுக்கு பாசன வசதி அளிக்கும் திட்டங்களை நடத்த வசதியிருக்கிறதே, அதை அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறதா ? அது பார்ட் 2 ஸ்கீமில் சேர்க்கப்பட்டிருக்கிறதா ?

The Hon. Sri P. Kakkan : அதுவும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்துவருகிறது. வீணைகப் போகும் தண்ணீரை தடுத்து நிறுத்தி ஏதாவது செய்ய முடியுமா என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இவை, அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். தஞ்சை ஜில்லாவில் வீணைகப் போகும் தண்ணீரை பயன்படுத்த, பம்பிங் ஸ்கீம்ஸ் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் பல பம்பிங் ஸ்கீம்ஸ் ஏற்படுத்த பரிசீலனை செய்து கொண்டு வரப்படுகிறது.

Minor Ports

*** 452 Q.—Sri A. Vedarathnam** : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா ?

(அ) 1960-ம் ஆகஸ்ட் மீ 20உன் 345 என் கேள்விகளுக்கு அளித்த பதிலையொட்டி நம் மாநிலத்திலுள்ள சிறு துறைமுகங்கள் அனைத்தையும் திறந்து போக்குவரத்துக்குத் தகுதியுடையவைகளாகச் செய்து கரையோரமுள்ள படகு சர்வீஸ் ஒன்றை ஆரம்பித்து போக்குவரத்தில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைக் குறைக்க உத்தேசம் உண்டா ?

(இ) அப்படியானால் அதன் விபரம் என்ன ?

The Hon. Sri P. Kakkan : (*a*) & (*b*) The question of introducing regular shipping service on the coast with small vessels to serve the needs of minor ports is under the consideration of the Government of India.

24th February 1961]

SRI A. VEDARATHNAM: இலங்கைக்கு அருகாமையிலுள்ள கோடிக்கரை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய அரசாங்கத்தினிடம் ஏதாவது திட்டம் உண்டா? ஒரு காலத்தில் இலங்கை சர்க்கார் அந்தத் துறைமுகத்தைத் திறப்பதற்கு விரோதமாகயிருந்தார்கள். மண்டபம் காம்பை மூடிய பிறகு காங்கேஸன்துரை வந்த பிறகு கோடிக்கரை துறைமுகத்தைத் திறக்க இப்பொழுது அனுகூலமாயிருக்கிறுர்கள். ஆகவே, இதுகுறித்து இலங்கை சர்க்காரோடு கடிதப் போக்குவரத்து நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா? நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுமா?

THE HON. SRI P. KAKKAN: நமது சென்னை மாநிலத்திலுள்ள சிறிய போர்ட்களில் கோடிக்கரை பற்றி எந்த முடிவும் எடுக்கப் படவில்லை. கடலூர், போர்ட்டோ நோவோ, நாகப்பட்டினம், தோப்புதுரை, அதிராம்பட்டினம், தொண்டி, பாம்பன், தனுஷ் கோடி, கீழ்க்கரை, தூத்துக்குடி, குலசேகரப்பட்டினம், குளச்சல் இவைகளை நல்ல முறையில் சீர்ப்படுத்த அரசாங்கம் உத்தேசித் திருக்கிறது.

SRI M. S. SELVARAJAN: சிறிய துறைமுகங்கள் அபிவிருத்தி சம்பந்தமாக அரசாங்கம் ஏதாவது கொள்கை அடிப்படையில் இவைகளை விருத்தி செய்ய முன்வருகிறதா? அப்படியிருக்குமாஞல், எந்தெந்த அடிப்படை அம்சங்களை அந்தப் பகுதியினர் நிறைவேற்றிஞல் சிறு துறைமுகங்கள் எடுத்து நிறைவேற்ற முடியும்? ஜில்லாதோறும் ஒன்றிரண்டு சிறு துறைமுகங்களை யாவது அரசாங்கம் இந்தத் திட்டத்தின் கீழ் ஏற்று அபிவிருத்தி செய்யுமா?

THE HON. SRI P. KAKKAN: சிறு துறைமுக அபிவிருத்திக் காக கமிட்டிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எந்தெந்த சாமான்கள் வழியாக என்னென்ன வருமானம் வருகிறது, அந்த வருமானத்தைக் கொண்டு அபிவிருத்தி செய்ய திட்டமிட ஒவ்வொரு போர்ட்டுக்கும் அட்வைஸரி கமிட்டி மாதிரி போட்டு அவைகளின் வருமானத்தைக்கொண்டு அபிவிருத்திச் செய்ய திட்டம் இருக்கிறது.

SRI S. RANGANATHA MUDALIAR: Is there any proposal to restore the port of 'Pulicat'? Is there any proposal before Government to widen the Cooum and Buckingham Canal for relieving congestion in traffic? If so, at what stage is it? 9 a.m.

THE HON. SRI P. KAKKAN: பக்கிங்காம் கால்வாய் பற்றிய வரை அதை ரிப்பேர் செய்வதுபற்றி ஒரு கமிட்டி நிறுவப்பட்டிருக்கிறது. அந்தக் கமிட்டி இதிலுள்ளப் பிரச்னைகளைப்பற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறுர்கள். சீக்கிரமாகவே அந்த பரிசீலனை முடிவடையும் என்று நினைக்கிறேன்.

SRI A. VEDARATHNAM: கனம் அமைச்சர் அவர்கள் அபிவிருத்தி செய்யப்போகின்ற மைனர் துறைமுகங்களைப்பற்றி குறிப்பிட்டதில் தோப்புத்துறை துறைமுகத்தைப்பற்றியும்

[24th February 1961

குறிப்பிட்டார்கள். அதை எந்த விதத்தில் அபிவிருத்தி செய்யப் போகின்றார்கள்? இதற்காக மைனர் போர்ட்ஸ் பண்டில் எவ்வளவு பணம் இருக்கிறது என்பதை தெரிவிக்க முடியுமா?

THE HON. SRI P. KAKKAN : இந்த ராஜ்யத்திலுள்ள 12 மைனர் போர்ட்களை முதலாவதாக எடுத்துக்கொள்ளப்போவதாகச் சொன்னேன். தோப்புத்துறை துறைமுகமும், அதிராம்பட்டினம் துறைமுகமும் இப்போது போக்குவரத்து இல்லாமல் இருக்கிறது. இதர போர்ட்டுகளில் போக்குவரத்து ஓரளவுக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே கனம் அங்கத்தினர் அவர்கள் 1960 ஆகஸ்ட் மாதத்தில் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லும்போது மைனர் போர்ட்ஸ் அபிவிருத்திக்காக சுமார் 6,45,000 ரூபாய் இருக்கிறது என்று சொன்னேன். எந்தெந்த முறையில் வேலை நடத்தப்படும் என்பதற்கு தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

SRI K. B. S. MANI : அரசாங்கம் சிறிய துறைமுகங்களை புனருத்தாரணத்திற்கு எடுத்திருப்பதில், எந்தெந்த தகுதியைக் கொண்டு இவ்வாறு சிறிய துறைமுகங்களை தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்? டினிசியர் காலத்தில் முக்கியத்துவமாயிருந்த தரங்கம்பாடி துறைமுகம் ஏன் இதில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை?

THE HON. SRI P. KAKKAN : நடைமுறையில் எந்த துறைமுகத்தை எடுத்துக்கொண்டால் நமக்குப் பயன்படும், எதை எடுத்துக்கொண்டால் போக்குவரத்துக்கு சாதகமாக இருக்கும், அதன் மூலம் வருமானம் வருமா என்பதை எல்லாம் பார்த்துத்தான் சர்க்கார் சிறிய துறைமுகங்களை தேர்ந்தெடுக்கிறது. தரங்கம்பாடியைப்பற்றி இப்போது பரிசீலிக்கவில்லை.

Merged areas

*453 Q.—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state when the Government propose to bring in legislation by which the laws of Andhra Pradesh that are in operation in the merged areas of our State under Pataskar Award would be replaced by the laws of Madras State?

THE HON. SRI C. SUBRAMANIAM : The question of undertaking legislation for extending the Acts and Regulations in force in the other areas of the State to the territory added to this State by the Andhra Pradesh and Madras (Alteration of Boundaries) Act, 1959 (Central Act 56 of 1959), and repealing the corresponding laws in force in the added territory is under the consideration of the Government and the necessary Bill for this purpose would be introduced in the Legislature in due course.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that in the Bill under reference there is a clause which stipulates that the Acts obtaining in these areas will be in operation only for a period of one year, i.e., from 1st April 1960 to 31st March